செய்தி வெளியீடு எண்: 443 நாள்: 10.07.2018

# செய்தி வெளியீடு

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் குறித்து இன்று (10.07.2018) சென்னை, தலைமை செயலகத்தில் கூட்ட அரங்கில் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உன்னத திட்டமான தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய்) திட்டம்–II, ஊரக குடியிருப்புத் திட்டங்களான முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல், ஊரக சாலைப் பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், குடிநீர் வசதி மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல், அம்மா பூங்கா, அம்மா உடற்பயிற்சி கூடம் போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

ஊரக வளர்ச்சித் துறையில், பல்வேறு திட்டங்களின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது நிலுவையிலுள்ள அனைத்துப் பணிகளையும், தரமானதாகவும், திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு, மக்கள் பயன்பெறத்தக்க வகையில் நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் பணிகளையும் உரிய காலத்திற்குள்

முடிக்கும் வகையில் அலுவலர்கள் விரைவாக செயலாற்ற வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், உழைக்கும் மகளிருக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனத் திட்டம், தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா, பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குதல் உள்ளட்ட பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு நடத்தினார்.

மேலும், அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின் கீழ் இதுவரை 19,230 மகளிருக்கு இருசக்கர வாகனம் வாங்க ரூ.47.92 கோடி விடுவிக்கப்பட்டுள்ளதை ஆய்வு செய்த அமைச்சர் இப்பணியை இன்னும் விரைவுபடுத்தி அதிக அளவில் மகளிருக்கு இருசக்கர வாகனங்கள் வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறத்தப்பட்டது.

மேலும், 2018–19ம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது, சட்டமன்ற போவையில், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி–110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகளான**

- 1200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 5500 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் அமைத்தல்
- ஊரகப் பகுதிகளில், நோய் தொற்று ஏற்படாது பாதுகாத்திட 2,00,500 உறிஞ்சு குழிகள் அமைத்தல்
- 1000 அங்கன்வாடி மையங்கள் கட்டுதல்
- 500 புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

- 1,200 கிராமங்களில் எதிர் சவ்வூடு பரவல் நிலையங்கள் அமைத்தல்

- சுய உதவிக் குழுக்களுக்கு 11,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்குதல் உள்ளிட்ட அறிவிப்புகள் மற்றும்

**மானிய கோரிக்கை அறிவிப்புகளான**

- 1500 கி.மீ நீளத்திற்கு ஓரடுக்கு கப்பி சாலைகள் அமைத்தல்

- 600 குறு பாலங்கள், 250 சிறு பாலங்கள் மற்றும் 100 தரைப் பாலங்கள் அமைத்தல்

- 300 கி.மீ நீளத்திற்கு பேவர் பிளாக் பாதைகள் அமைத்தல்

- 300 கி.மீ நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்

- சாலையோரங்களில் 10 ஆயிரம் கி.மீ நீளத்திற்கு 20 இலட்சம் மரக்கன்றுகள் நடுதல்
- 10 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ்

    - 20,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழுக்களுக்கு 104 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்குதல்

    - 13,500 சுய உதவிக் குழுக்களுக்கு 20.25 கோடி ரூபாய் ஆதார நிதி வழங்குதல்

- தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ்

    - 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஆதார நிதி வழங்குதல்.

    - 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு 10 கோடி ரூபாய் ஆதார நிதி வழங்குதல்

- மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்திட 6 மாவட்டங்களில் 70 மீன் வலை பின்னும் கூடம், 10 மீன்உலர் களங்கள் அமைத்தல்.

- கடலோரப் பகுதி மக்களுக்கு, புதிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திட 30,000 பயனாளிகளுக்கு 75 கோடி ரூபாய் வாழ்வாதார மேம்பாட்டுக் கடன் வழங்குதல்
- 71,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் அளித்தல்

உள்ளிட்ட அறிவிப்புகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு, திட்ட செயலாக்கத்திற்கு விரைவுபடுத்திட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ராஜ் துறை அரசு கூடுதல் தலைமை செயலர் திரு.ஹன்ஸ்ராஜ்வர்மா இஆப., அரசு கூடுதல் தலைமை செயலாளர் / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் (பயிற்சி) திருமதி. மீனாட்சி ராஜகோபால் இஆப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இஆப., தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.பிரவீன் நாயர் இஆப., தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்ட தலைமை செயல் அலுவலர் திருமதி.எஸ்.பி.கார்த்திகா இஆப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி கூடுதல் இயக்குநர்கள், கண்காணிப்பு பொறியாளர் (ஊரக வளர்ச்சி), இணை இயக்குநர்கள், உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**